# வரலாற்று நோக்கில் ஆரியரும் திராவிடரும்!

அண்மைக் காலமாகத் தமிழ்நாட்டு சங்கிகள் அண்ணல் அம்பேத்கரின் பின்னால் ஒளிந்து கொள்ள முயற்சிக்கிறார்கள். திராவிடர் இயக்கத்தை எதிர்கொள்ள 'சூத்திரர்கள் யார்?' நூலில் அண்ணல் முன்வைத்த ஒரு சில வரிகளை மட்டும் தங்களுக்கேற்ற விதத்தில் பயன்படுத்த முற்படுகிறார்கள்.

"ஆரியர்கள் என்பவர்கள் ஒரு தனித்த மரபினம் அல்லர் - ஆரியர் படையெடுப்பு என்கிற கருத்தாக்கமே கட்டமைக்கப்பட்ட ஒன்று". அண்ணல் அம்பேத்கர் தமது நூலில் இப்படிச் சொல்லி இருக்கிறார்தாம். அவற்றைத் தங்களுக்குச் சாதகமாய்ப் பயன்படுத்திக்கொள்ள பார்ப்பனர்கள் விரும்புகிறார்கள்.

பார்ப்பனர்கள் இப்படிச் செய்கிறார்கள் என்றால், பிற திராவிட இயக்க வெறுப்பாளர்கள் இன்னொரு கதை கட்டுகிறார்கள். "ஆரியர்-திராவிடர் முரண் என்பது கற்பனையானது. ஆரியர் போல திராவிடரும் தமிழ் மண்ணுக்கு அந்நியமானவர்களே!". இது அவர்களின் கூற்று.

'சூத்திரர்கள் யார்?' நூல் 1946-ல் வெளிவந்தது. அன்றைக்கிருந்த ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் அம்பேத்கர் மேற்கண்ட தமது கருத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறார். அதை மீளாய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.

இத்தகைய சூழலில், வரலாற்று நோக்கில் ஆரியர்-திராவிடர் என்ற கருத்தாக்கத்தை ஆய்வு செய்வது அவசியமாகிறது. கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் ஆரியர்-திராவிடர் குறித்த செய்திகளைக் காணும் நோக்கத்தில் இக்கட்டுரை எழுதப்படுகிறது.

முதலில் அண்ணல் அம்பேத்கர் மேற்கண்ட நூலில் குறிப்பிடும் ஒரு கருத்தைப் பார்ப்போம்!

"ஆரியர்-ஆரியர் அல்லாதார் (திராவிடர்) என்கிற இரு நாட்டுக் கொள்கையில் நம்பிக்கை உடையவர்களாகப் பார்ப்பன ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். அவ்வாய்வாளர்கள், ஆரிய மரபினத்தின் பிரதிநிதிகளாகத் தங்களை உரிமை கொண்டாடும் அதே வேளையில், பார்ப்பனரல்லாத பிற இந்துக்களை ஆரியர் அல்லாதவர்களின் வாரிசுகளாகக் கருதுகின்றனர்.

ஐரோப்பிய மரபினத்தோடு இரத்த உறவு கொண்டவர்களாகத் தாங்கள் உரிமை கொண்டாடுவதற்கு வாய்ப்பளிப்பதோடு, அந்த ஐரோப்பியர்களின் திமிரையும், ஆதிக்க உணர்வையும் பகிர்ந்து கொள்ள இந்தக் கொள்கை உதவிகரமாக இருக்கிறது என்று அவர்கள் கருதுகின்றனர். படையெடுத்து வந்து ஆரியர் அல்லாத பூர்வகுடி மக்களை ஆரியர்கள் வென்றார்கள் என்று குறிப்பிடும் பகுதிதான் அவர்களுக்கு மிகவும் உவப்பானதாக இருக்கிறது. ஏனெனில், பார்ப்பனரல்லாதாருக்கு எஜமானர்களாய் இருப்பதை நிரந்தரமாக்குவதற்கும், அதற்கு நியாயம் கற்பிக்கவும் இதுதான் அவர்களுக்கு வசதியாய் இருக்கிறது".

பக்கம் 60, அம்பேத்கர் நூல் தொகுதி - 7 (ஆங்கிலம்)

அண்ணல் குறிப்பிடுகிற பார்ப்பன ஆய்வாளர்களுள் பால கங்காதர திலகரும் ஒருவர். அண்ணலின் கருத்துக்குப் பின்னால் ஒளிந்து கொள்ளும் பார்ப்பனர்கள் இவற்றை எல்லாம் ஏற்கிறார்களா இல்லையா?

ஆரியர்கள் மத்திய ஆசியாவிலிருந்து கைபர், போலன் கணவாய் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்த வேட்டைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுதான் ஆய்வாளர்கள் ஏற்கும் செய்தி. அவ்வாறு வந்தவர்கள் குடியேறிய இடங்களை ஆரியவர்த்தம் என்று வழங்கினர். ஆரியவர்த்தம் என்பது வட இந்தியாவின் வடக்கு எல்லையில் உள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில்,. பார்ப்பனர்கள் தங்களை ஆரியர் என்றே அடையாளம் கூறிக் கொண்டனர். அண்ணல் அம்பேத்கர் சொல்வது மாதிரி ஆரியரல்லாத பூர்வகுடி மக்களிடமிருந்து தங்களை வேறுபடுத்தித் தனியாகக் காட்டிக் கொள்ளும் போக்கு ஆங்கிலேயர் காலத்தில் மட்டுமல்ல, பழங்கால மன்னராட்சிக் காலங்களிலும் பார்ப்பனர்களிடம் மிக உறுதியாகவும் இருந்தது.

பார்ப்பனர்கள் தமிழ்நாட்டு மக்களல்ல. வெளியிலிருந்து அழைத்து வரப்பட்டவர்கள்தான் என்பதற்கு எண்ணிறந்த சான்றுகள் உள்ளன. எடுத்துக்காட்டிற்கு, சோழநாட்டில் அவர்களைக் கொண்டு வந்து குடியேற்றியது சோழ அரசர்களே ஆவர்.

கன்னியாகுமரியில் உள்ள பகவதி அம்மன் கோயிலில் உள்ள வீரராஜேந்திர சோழனின் தூண் கல்வெட்டின் சமஸ்கிருதப் பகுதியில் அடங்கியுள்ள வரிகளில் சில பின்வருமாறு:

"காவிரி நதியில் நீராடிய பிறகு அரசன் (சோழன் என்பது அவன் பெயர்) பிராமணர்களைத் தேடினான்... அப்பகுதியில் பிராமணர்கள் எவருமே இல்லை. ஆகவே நற்குணங்கள் கொண்ட பெரும் எண்ணிக்கையிலான பிராமணர்களை ஆரியவர்த்தத்திலிருந்து அழைத்து வந்து அங்கே (காவிரி நதிக் கரையில்) குடியேற்றினான்".

(பக்கம் 4, எபிகிராபிகா இண்டிகா, தொகுதி-18)

கல்வெட்டு குறிப்பிடுகிற சோழன் என்பது குறிப்பாக எந்த சோழனைக் குறிக்கிறது என்பதை நாம் உறுதியாகக் கூறமுடியவில்லை என்றாலும், தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில் நாம் ஆரியர் என்ற சொல்லை கி.பி.பத்தாம் நூற்றாண்டிலிருந்து பரவலாகக் காணமுடிகிறது.

அவ்வாறு ஆரியர் என்று காணப்படும் கல்வெட்டுகளைத் தொகுத்துப் பார்க்கலாம்.

**1. காணப்படும் ஊர் : திருவீழிமிழலை, திருவாரூர் மாவட்டம்.**

**கல்வெட்டு வாசகம் : "ஆரியப்பட்ட நிலம் மூன்று மாவில்"**

**தமிழ்நாடு தொல்லியல் ஆய்வுத்துறை 564/1977. கல்வெட்டின் காலம் பத்தாம் நூற்றாண்டு.**

**2. ஊர் : திருவடி, கடலூர் மாவட்டம்.**

**வாசகம் : "திருநந்தா விளக்கு அரைக்கு செம்பொன் இரு கழஞ்சு ஆரியன் திரிபுவனபட்டன்"**

**கல்வெட்டு ஆண்டு : 1110**

**(AR No 29 of 1903)**

**3. ஊர் : திருநீர்மலை, செங்கல்பட்டு மாவட்டம்.**

**வாசகம் : "ஆரியரில் திருவண்ணாமலை உடையானான ஐய்யநங்காரப் பிரமாராயர் மகன் வளத்து வாழ்வித்தார்"**

**ஆண்டு : கி.பி.1210 - (AR No 557 of 1912)**

**4. ஊர் : ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம்.**

**வாசகம் : "ஸ்ரீபாதந் தாங்கும் நம்பிமாரும் திருவாசல் ஆரியர் உள்ளிட்ட பலபணி நிமந்தக்காரரும்"**

**ஆண்டு : கி.பி.1225 - (AR No 53 of 1892)**

**5. ஊர் : திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்.**

**வாசகம் : "ஆரிய பிராமணரில் அழகன் வானோர் பிரானான வானவன் பிரமாதிராயர்"**

**ஆண்டு : கி.பி.1239 - (AR No 130 of 1908)**

**6. ஊர் : திருவிடைமருதூர், தஞ்சாவூர் மாவட்டம்.**

**வாசகம் : "காமிறை ஆரியரில் திருவேகம்பமுடையார் எழுத்து"**

**ஆண்டு : கி.பி.1243 - (AR No 291 of 1907)**

**7. ஊர் : வில்லியனூர், புதுச்சேரி.**

**வாசகம் : "குற்றெத்தபற்று ஆரியன் பற்று நிலம் ஆறு மாவும்"**

**ஆண்டு : கி.பி.1249**

**(புதுச்சேரி மாநில கல்வெட்டுகள் தொகுதி-1, எண்.382, பக்கம்.339)**

**8. ஊர் : சேகல், திருவாரூர் மாவட்டம்.**

**வாசகம் : "ஆரிய தேவபட்டன் எழுத்து"**

**ஆண்டு : கி.பி. 13-ஆம் நூற்றாண்டு**

**(திருத்துறைப்பூண்டி கல்வெட்டுகள், 109/1976)**

**9. ஊர் : பேரூர், கோவை மாவட்டம்.**

**வாசகம் : "மதுக்கரை ஊர் பிராமணர் ஆர்ய கோத்திரத்து பாடி மன்றாட்டு ஒன்றும்"**

**ஆண்டு : 13-ஆம் நூற்றாண்டு**

**(கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி-3, எண்.111/2004, பக்கம்.299)**

**10. ஊர் : சிதம்பரம், கடலூர் மாவட்டம்.**

**வாசகம் : "தென்னவன் சென்றெதிர்ந்து தாரேற்ற வெம்படை ஆரியர் தண்டுபட"**

**ஆண்டு : கி.பி. 13-ஆம் நூற்றாண்டு**

**(AR No 170 of 1892)**

**11. ஊர் : திருப்புல்லாணி, இராமநாதபுரம் மாவட்டம்.**

**வாசகம் : "தேவர் ஆரியச் சக்கரவர்த்திகள் திருமுகப்படி"**

**ஆண்டு : கி.பி. 1305 - (AR No 110 of 1903)**

**12. ஊர் : திருப்புல்லாணி, இராமநாதபுரம் மாவட்டம்.**

**வாசகம் : "தெய்வச்சிலையான் அழகனான ஆரியச் சக்கரவர்த்தியும் பராக்கிரமப் பாண்டியன் அம்மான் இராமனான வ... கை ஆரியச் சக்கரவர்த்தியும்"**

**ஆண்டு : கி.பி. 1320 - (AR No 112 of 1903)**

**13. ஊர் : டணாய்க்கன் கோட்டை, ஈரோடு மாவட்டம்.**

**வாசகம் : "வேதியரும் ஆரியரும் விளங்குகின்ற வேளாளரும்"**

**ஆண்டு : கி.பி. 1346 - (AR No 442 of 1906)**

**14. ஊர் : திருப்பனங்காடு, திருவண்ணாமலை மாவட்டம்.**

**வாசகம் : "ஆரியரில் போதாயன சூத்திரத்தில் பாரத்வாஜி முதலியான விஜயசிங்க தேவனுக்கு"**

**ஆண்டு : கி.பி. 1367 - (AR No 250 of 1906)**

**15. ஊர் : திருக்களக்குடி, சிவகங்கை மாவட்டம்.**

**வாசகம் : (i) "திருவிராமீஸ்வரத்து ஆரியன் தங்க நாராயண தேவன்"**

**(ii) "கொங்கிப் பெருமாள் ஆரியப் பட்டகளில் ஆத்த பட்டர்"**

**ஆண்டு : 14-ஆம் நூற்றாண்டு - (AR No 109 of 1916)**

**16. ஊர் : திருவோத்தூர், திருவண்ணாமலை மாவட்டம்.**

**வாசகம் : "சாண்டில்ய கோத்திரத்து ஆரியன் முதலியார்**

**திருவானைக்காவுடையானுக்கு"**

**ஆண்டு : கி.பி. 1425**

**(தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி 11, 67/2017, பக்கம்.112)**

**17. ஊர் : பெருநகர், காஞ்சிபுரம் மாவட்டம்.**

**வாசகம் : "ஊற்றுக்காட்டு கோட்டத்து ஆற்றூரில் ஆற்றுழார்**

**ஆரியர் உள்ளிட்டார்க்கு பங்கு மூன்றும்"**

**ஆண்டு : கி.பி. 1444**

**(ஆவணம்-27, பக்கம்.110)**

**18. ஊர் : வடசேரி, கன்னியாகுமரி மாவட்டம்.**

**வாசகம் : "நாஞ்சி நாட்டு சுசீந்தரத்து கோதுகுலச் சபையாரின்**

**ஆரியன் சொக்கன் பெரிய பெருமாள் மார்த்தாண்ட பிரமாதராயனுக்கு"**

**ஆண்டு : கி.பி. 1532**

**(கன்னியாகுமரி மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-3, எண்.323/1928)**

மேற்கண்ட சான்றுகள் தெரிவிப்பது என்ன? ஆரியர் என தமிழ்நாட்டில் வழங்கப்பட்டவர்கள் அனைவரும் பார்ப்பனர்கள் ஆவர். ஏதோ ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் இவர்கள் இருக்கவில்லை. தமிழ்நாடு முழுவதும் பரவலாக வாழ்ந்திருந்தார்கள். மேலே கண்ட சான்றுகள் பத்தாம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டு வரையிலானவை.

தங்களை ஆரியர் என்று சொல்லிக் கொண்டது மாத்திரமல்லாமல், தாங்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்பதையும் தெரிவிக்கும் கல்வெட்டுச் சான்றுகளும் உள்ளன. அவற்றையும் பார்க்கலாம்!

**1. ஊர் : திருவொற்றியூர், சென்னை மாவட்டம்.**

**வாசகம் : "ஆரிய தேசத்து மேற்களாபுரத்து பிரபாகரப் பட்டன் பிராமணி ந... பைசாரநியான் ஆரியவம்மை பக்கல்"**

**ஆண்டு : கி.பி. 1021 - (AR No 126 of 1912)**

**2. ஊர் : திருவொற்றியூர், சென்னை மாவட்டம்.**

**வாசகம் : "ஆரிய தேசத்து மேற்களாபுரத்து பிரபாகரப் பட்டன்**

**பிராமணி நக்கயென்பச்சானியான ஆரியவம்மை"**

**ஆண்டு : கி.பி. 1042 - (AR No 155 of 1912)**

**3. ஊர் : திருவொற்றியூர், சென்னை மாவட்டம்.**

**வாசகம் : "ஆரிய தேசத்து மேற்களாபுரத்து பிரபாகரப் பட்டன்**

**பிராமணி நாகலவ்வைச்சானியான ஆரியவம்மை"**

**ஆண்டு : கி.பி. 1049 - (AR No 132 of 1912)**

**4. ஊர் : சேரன்மாதேவி, திருநெல்வேலி மாவட்டம்.**

**வாசகம் : "ஆரிய தேசத்து புரோகித தனேஸ்வரன் சூத ஸ்ரீதரபாத்யாயன்"**

**ஆண்டு : கி.பி. 1225 - (AR No 191 of 1895)**

ஆரிய தேசம் என்பது இன்றைய காஷ்மீர், உத்திரப்பிரதேசப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதியாகும். இன்றைக்குள்ள அவ்விரு மாநிலப் பகுதிகளில், காஷ்மீர்ப் பகுதியிலிருந்தே அதிகமான பார்ப்பனர்கள் இங்கு வந்து குடியேறி இருக்க வேண்டும்.

கல்வெட்டுகளில் அந்தக் குறிப்பிட்ட பகுதி சார்ந்த தங்கள் அடையாளத்தைப் பார்ப்பனர்கள் பதிவு செய்தே வந்துள்ளனர். அவற்றையும் பார்ப்போம்!

**1. ஊர் : திருப்பாலைவனம், திருவள்ளூர் மாவட்டம்.**

**வாசகம் : "காச்மீரத்து ஆரியன் திருச்சிற்றம்பலமுடையான் பதுமஞன் கட்டமான்"**

**ஆண்டு : கி.பி. 1228**

**(தமிழ்நாடு கல்வெட்டுகள் தொகுதி-17, எண்.207/2021, பக்கம்.273)**

**2. ஊர் : அழகர் கோயில், மதுரை மாவட்டம்.**

**வாசகம் : "காஷ்மீர தேசத்தில் சாவா சிவபிராமண நில..."**

**ஆண்டு : கி.பி. 13-ஆம் நூற்றாண்டு**

**(அழகர் கோயில் கல்வெட்டுகள், எண்.353/2003, பக்கம்.141)**

**3. ஊர் : துக்கோஜின ஹள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**வாசகம் : "காஷ்மீர தேசத்து ஆத்ரேய கோத்திரத்து ஆரியன்**

**திருவேகம்பலமுடையான் மகன் பூவாண்டையான அரசகளாதிச்ச பிரமாராயன்"**

**ஆண்டு : கி.பி. 13-ஆம் நூற்றாண்டு**

**(AR No 6 of 1900)**

**4. ஊர் : சீயமங்கலம், திருவண்ணாமலை மாவட்டம்.**

**வாசகம் : "காச்மீரத்து ஆரியபட்டர்களில் யஜீர் வேதி போதாயன**

**சூத்திரத்து பாரத்வாஜ கோத்திரத்து திருவானைக் காவுடையார் பெரிய பெருமான் ஆரியச் சக்கர வர்த்தி"**

**ஆண்டு : கி.பி. 1384**

**(தமிழ்நாடு கல்வெட்டுகள் தொகுதி-13, எண்.293/2018, பக்கம்.181)**

இதுவரை பார்த்த சான்றுகளில் இருந்து ஆரியர் என்பது பார்ப்பனர்களை மட்டுமே குறித்தது என்பதையும், ஆரியர் என்பதோடு, ஆரிய தேசத்திலிருந்து வந்தவர்கள், காஷ்மீர் தேசத்தில் இருந்து வந்தவர்கள் என்பதைத் தங்களது பெருமைமிகு அடையாளமாகப் பார்ப்பனர்கள் கூறிக்கொண்டார்கள் என்பதையும் நாம் அறியமுடிகிறது. அதோடு தங்களது கோத்திரங்களையும், தங்களுக்குரிய சூத்திரங்களையும் அறிமுகப்படுத்திக் கொள்வதன் வாயிலாகப் பிறரிடம் இருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் காட்டிக்கொண்டார்கள் என்பதையும் அறிந்தோம்.

அண்ணல் சொல்வதைப்போல, பார்ப்பனரல்லாத பிற மக்களுக்கு எஜமானர்களாய் இருப்பதை நிலைநிறுத்துவதற்கும், அதற்கு நியாயம் கற்பிக்கவும் இதுதான் அவர்களுக்கு வழிகோலுவதாக இருந்தது.

அதோடு மட்டுமல்லாமல், வடக்கில் தங்கள் பெயரில் ஒரு தேசத்தை உருவாக்கிக் கொண்டதைப் போல, தெற்கில் அப்படியொரு தேசத்தை உருவாக்கிக் கொள்ள முடியாவிட்டாலும், தேசத்தில் சிறிய அலகாய் விளங்குகிற நாடு என்பதை உருவாக்கிக் கொண்டார்கள் என அறியமுடிகிறது. ஆரிய நாடு, தென் ஆரிய நாடு என்னும் பெயர்களில் அப்பகுதி வழங்கப்பட்டது. வாசுதேவநல்லூர், கரிவலம் வந்த நல்லூர், தேவதானம் போன்ற ஊர்களை உள்ளடக்கியதாக ஆரிய நாடு இருந்தது. அவ்வாறு ஆரியநாடு என்ற பெயரினைத் தாங்கிய கல்வெட்டுகள் கி.பி.பதினான்காம் நூற்றாண்டில் இருந்து கிடைக்கின்றன.

ஆரியர் என்ற அடையாளத்தின் மூலம் தங்கள் மேலாண்மையை நிறுவியதற்கான சான்றுகளே நாம் இதுவரை பார்த்தவையாகும். திராவிடர் என்ற அடையாளம் பெருமைக்குரியதாகக் கல்வெட்டுகளில் காணப்படவில்லை என்றாலும் திராவிட அடையாளம் தமிழ்நாட்டுக்குரியதாக கல்வெட்டுகளில் ஆங்காங்கே காணக் கிடைக்கின்றது.

வடக்கே ஆரிய தேசம் உள்ளது போல தெற்கேயுள்ள தமிழ்நாட்டுப் பகுதியை திராவிட தேசம் என்று கூறும் ஒருகல்வெட்டை நாம் பார்க்கலாம்.

**"திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரிமேல் கொண்டான் திராவிட தேசம் கிழங்காநாட்டு நெருவூரான வீரசோழசதுர்வேதிமங்கலமுடைய நாயனாருக்கு"**

(கோயில் சாசனங்கள் தொகுதி-2, எண் 714)



**ம.மதிவண்ணன்**
எழுத்தாளர்

இக்கல்வெட்டு கரூர் மாவட்டம், நெரூரில் காணக் கிடைக்கிறது. கி.பி.1285-ஆம் ஆண்டைச் சேர்ந்தது.

அடுத்ததாக நாம் காண இருக்கும் கல்வெட்டு கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணத்தில் உள்ளது. அது பின்வருமாறு:

**"ரிஷப லக்கனத்தில் ஸ்வாமி எழுந்தருளப் பண்ணி பூஜை நிவேதனம்**

**உற்சவாதிகளுக்கு ராங்கியன் சிலுவச்சேரி திராவட நல்லூர் ஸ்வ...**

**ரகுழி பாழ் நத்தம் இதுகளை"**

(AR No 145 of 1898)

கி.பி.1713-ஐச் சேர்ந்த கல்வெட்டு இது. கடலூர் மாவட்டத்தில் திராவிட நல்லூர் என்ற ஊர் இன்றும் உள்ளது. அஃது கி.பி.1713-லும் அந்தப் பெயரில்தான் வழங்கப்பட்டது என்பதை மேற்கண்ட கல்வெட்டு அறியத் தருகிறது.

அடுத்த கல்வெட்டு புதுச்சேரி மாநிலம், திருநள்ளாரில் உள்ளது. அக்கோயிலில் முப்பது வட்டக்காணியுடைய பார்ப்பனர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறது. அதில் ஒரு பகுதி கீழே காணப்படுவதாகும்.

**"...... விக்கிரம சோழபட்டனும் இவந் தமையன்-**

**மாரன சான்றருளிய பெருமான் திராவிடர் தீர்த்தருளின**

**நாடுடை நாய...ர் நாடுடைப் பெருமான் நாற்பத் தெண்ணாயிரப் பண்டிதரும்"**

(புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுகள் தொகுதி-1, எண்.476)

கல்வெட்டின் காலம் கி.பி.1165-ஆம் ஆண்டாகும். கல்வெட்டில் குறிப்பிடப்படும் பார்ப்பனரின் பெயர் சான்றருளிய பெருமான் திராவிடர் தீர்த்தருளின நாடுடை நாய...ர் நாடுடைப் பெருமான் நாற்பத் தெண்ணாயிரப் பண்டிதர் என்பதாகும்.

கல்வெட்டு குறிப்பிடுவது போல் திராவிடர் தீர்த்தல் என்றால் என்ன பொருள்? திராவிடரை வாதத்தில் வெல்லுவதா, ஆளையே காலி பண்ணுவதா என்பது தெரியவில்லை. எனினும் ஆரியருக்கு எதிரான கொள்கை உடையவர் என்பது தெரிகிறது.

ஆரியர்-திராவிடர் முரண் என்பது கற்பனையானது என்று இன்றைக்குக் கிளப்பி விடுவதெல்லாம் இதைப் போன்ற செய்திகளின் அடிப்படையில் வைத்துப் பார்த்தால், அவற்றின் பெறுமதி தெரிந்துவிடும்.

இன்றைய பெரியாருக்குப் பிறகான திராவிடர் இயக்கத்தின் கொள்கைகளை எல்லாம் அக்காலத் தமிழர் மீது திணிப்பது என்று கூட இதை யாரேனும் சொல்லக்கூடும். இக்கல்வெட்டில் காணப்படும் பார்ப்பனரின் பெயர் பண்டிதர் என்று முடிகிறது. பண்டிதர் என்பது காஷ்மீரத்துப் பார்ப்பனர்களின் பெயராகும். சர்வசிவ பண்டிதர், ஈசான சிவ பண்டிதர் ஆகியோர் முதலாம் ராஜராஜன், முதலாம் ராஜேந்திரச் சோழன் ஆகியோரின் ஆச்சாரியர்கள் ஆவர்.

பார்ப்பன ஆச்சாரியர்களை ராஜகுருவாகக் கொண்ட மன்னர்கள் அக்காலங்களில் கோயில்களில் மகாபாரதம், பார்ப்பன வேதங்கள் ஆகியவற்றை வாசிக்கவும், விளக்கவும் ஏற்பாடுகள் செய்திருந்தனர் என்பதை நாம் பல கல்வெட்டுகளில் காணமுடிகிறது. இவற்றின் ஊடாக இங்கு வருணாசிரம தர்மம் மக்களிடையே நிலைநிறுத்தப்பட்டது. வர்ணாசிரம தர்மத்தை முன்மொழியும் விதந்தோதும் மனு தர்மம் கூட ஆலயங்களில் போதிக்கப்பட்டது. எடுத்துக்காட்டிற்கு, திருபுவனையில் உள்ள கீழ்க்கண்ட கல்வெட்டை எடுத்துக் கொள்ளலாம்.

"இருக்கு வேதம் ஓதுவிப்பார் மூவரும் யஜுர் வேதம் ஓதுவிப்பார் மூவரும் சந்தோகசாமம் ஓதுவிப்பான் ஒருவனும் தலவுகார சாமம் ஓதுவிப்பான் ஒருவனும் அபூர்வ்வம் ஓதுவிப்பான் ஒருவனும் வாஜசநையம் ஓதுவிப்பான் ஒருவனும் பௌதாயன சூத்திரம் ஓதுவிப்பான் ஒருவனும் சந்தூஷாட சூத்திரம் ஓதுவிப்பான் ஒருவனும் ஆக பன்னிருவருக்கு நாளொன்றுக்குப் பேரால் நெல் தூணியாக நெல் நாற்கலமும் வேதாந்தம் வக்காணிப்பான் ஒருவனுக்கு நெல் கலனே பதக்கும் மீமாம்சை வக்காணிப்பான் ஒருவனுக்கு நெல் கலமும் வியாகரணம் வக்காணிப்பான் ஒருவனுக்கு நெல் இரு தூணிக் குறுணியும், உருபாவதாரம் கேட்பிப்பான் ஒருவனுக்கு நெல் தூணிப்பதக்கும் மாபாரதமும் ஸ்ரீராமாயணமும் வாசிப்பான் ஒருவனுக்கு நெல் குறுணியும் ஸ்ரீமனு சாத்திரம் கேட்பிப்பான் ஒருவனுக்கு நெல் தூணியும் ஸ்ரீவைகானசம் ஓதுவிப்பான் ஒருவனுக்கு நெல் முக்குறுணியும் இருக்கு வேதம் அபூர்வம் ஓதுவார் அறுபதின்மரும் யஜுர் வேதம் அபூர்வம் ஓதுவார் அறுபதின்மரும் சந்தோக சாமம் ஓதுவார் இருபதின்மரும் தலவுகார சாமமும் அபூர்வம் வாஜசநெயமும்

போதானிய சூத்திரமும் சத்தூஷாட சூத்திரமும் ஓதுவார் ஐம்பதின்மரும் ஆக நூற்றுத் தொண்ணூற்றுவர்க்கும் பேரால் நெல் அறுநாழியாக நெல் பதினோரு கலனே இரு தூணிப் பதக்கு நானாழியும்"

(புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுகள் தொகுதி-1, எண்.102, பக்கம்.122)

இது முதலாம் ராசாதிராசனின் 30-வது ஆட்சி ஆண்டின் (கி.பி.1048) கல்வெட்டு. கோயில்களில் மனுதரும சாஸ்திரம் விளக்கப்பட்டிருக்கிறது என்றால், அன்றைய சமூகத்தில் மதத்தின் பெயரால் பார்ப்பனர்கள் பெற்றிருந்த உச்சபட்ச நிலையை அது நிறுவுவதாய் இருக்கிறது.

இன்றைக்கு மீண்டும் மன்னராட்சிக்குத் திரும்பும் வாய்ப்பில்லாவிட்டாலும் கூட, குறைந்தப்பட்சம் சர்வாதிகார ஆட்சி முறைக்கோ, அதிபர் ஆட்சி முறைக்கோ சென்று விட வேண்டும் என பார்ப்பன ஆர்.எஸ்.எஸ் போன்ற அமைப்புகள் ஏங்குவது ஏன் என்பது இந்த பின்புலத்தை வைத்துப் பார்த்தால் விளங்கிவிடும்.

ஆரியர்-திராவிடர் குறித்த புரிதலை ஏற்படுத்த ஒரு செய்தியை நினைவுபடுத்துவது இங்கு அவசியம் என்று நினைக்கிறேன். அது காகதீய அரசி ருத்ரமா தேவியின் கல்வெட்டொன்றில் குறிப்பிடப்படும் செய்தி.

"மண்டரம் ஊரினை வெலங்கப்பூண்டி ஊருடன் இணைத்துத் திராவிட பிராமணர்களான அறுபது குடும்பத்தாருக்கு அவர் தானமாக வழங்கினார்"

(ARE 1917 Post II PP 122 to 126)

மண்டரம் என்னும் அந்த ஊர் தற்போது மண்டடம் என அழைக்கப்படுகிறது. அறிக்கை குறிப்பிடும் கல்வெட்டு கி.பி.1261-ஆம் ஆண்டைச் சேர்ந்தது. கல்வெட்டில் குறிப்பிடப்படும் திராவிட பிராமணர்கள் என்பவர்கள் திருவாரூரிலிருந்து அங்கு மண்டரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் ஆவர். மேற்குறிப்பிட்ட கல்வெட்டு ஆண்டறிக்கை மற்றொரு செய்தியையும் குறிப்பிடுகிறது.

"ஊரில் குடியேற்றப்பட்டவர் திராவிட பிராமணர்கள் என்பது கேட்பதற்கு வியப்பாய் இருக்கும். அவ்வூரில் ஏற்கனவே ஆந்திர பிராமணர்கள் அதிக எண்ணிக்கையில் வசிக்கவே செய்திருப்பர்; ஆயினும் அவர்கள் குறித்து எதுவும் சொல்லப்படவில்லை".

(மேலது)

திருவாரூரிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட பிராமணர்கள் திராவிட பிராமணர்கள் என்று அழைக்கப்பட்டிருக்கின்றனர். ஆந்திரப் பகுதியில் வசித்தவர்கள் ஆந்திர பிராமணர்கள் என்று வழங்கப்படுகிறார்கள்.

இந்தச் செய்தி நமக்குச் சில உண்மைகளைப் புலப்படுத்துகிறது. தமிழ்நாட்டுப் பகுதியான திருவாரூரிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட பார்ப்பனர்கள் தமிழ்நாட்டு பார்ப்பனர்கள் என்றோ, தமிழ்ப் பார்ப்பனர்கள் என்றோ ஏன் குறிப்பிடப்படவில்லை. ஏனெனில், அப்போது தமிழ்நிலப் பகுதி முழுவதும் தமிழ்நாடு என்ற பெயரில் வழங்கப்படவில்லை. தமிழ்நாட்டு நிலப்பகுதியில் திராவிடர்கள் வாழ்ந்தார்கள். ஆகையால், அது திராவிட தேசம் என வழங்கப்பட்டது. அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டவர்கள் திராவிட பிராமணர்கள் என்று குறிப்பிடப்பட்டார்கள்.

அப்படியானால், தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களை இணைத்துத் திராவிடம் என்று சொல்வது வழக்கமில்லையா? இல்லை என்றுதான் ருத்ரமாதேவியின் இந்தக் கல்வெட்டு நிறுவுகிறது. ஆந்திரமும் திராவிட தேசத்தின் ஒரு பகுதியாய் இருந்திருப்பின், அதையும் உள்ளடக்கிய பொதுப் பெயரான திராவிட என்ற முன்னொட்டோடு திராவிட பிராமணர்கள் என திருவாரூர் பிராமணர்களை அழைத்திருக்க மாட்டார்கள் அல்லவா!

**ஆக இந்த சான்றாதாரங்களின் வெளிச்சத்தில் பார்க்கும்போது, திராவிடர் என்பது தமிழ்ச் சமூகத்தின் பார்ப்பனரல்லாத உழைக்கும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வெகுமக்களைக் குறிப்பதாக இருந்திருக்கிறது. ஆரியர் என்பது சலுகைகளும், சிறப்புரிமைகளும் பெற்று உழைக்காமல், சமூகத்தின் உற்பத்தியில் எவ்விதத்திலும் பங்கெடுக்காமல் ஏய்த்துத் தின்னும் பார்ப்பன எஜமானர்களைக் குறிப்பதாகவும் இருந்திருக்கிறது.**

இந்த பார்ப்பனர்கள் ஆடம்பரத்திலும், அதிகாரத்திலும் திளைப்பதற்காக உழைக்கும் சாதிகளைச் சேர்ந்த மக்கள் வறுமையில் உழன்று, அவர்களுள் சிலர் வாழ வழியற்றுத் தங்களை அடிமைகளாக விற்றுக் கொள்ளும் நிலைகூட பரவலாக இருந்திருக்கிறது.

இந்நிலையில் மாற்றத்தைக் கொண்டு வரும் நோக்கத்தில், தமிழர்கள் திராவிடர் அடையாளத்தைத் தூக்கிப் பிடித்தது என்பதுத் தமிழ்ச் சமூக வரலாற்றில் நிகழ்ந்த மிக அற்புதமான ஒரு நிகழ்வாகும்.



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றியம் ஆலடிப்பட்டி ஊராட்சி அருநூத்துமலையில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமை கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் துவக்கி வைத்தார் . தொடர்ந்து பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி தீர்வு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளரும், முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவருமான ஏ. விஜயகுமார் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



தஞ்சை மாவட்டம், கரந்தைப் பகுதியில் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமினை தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, ச.முரசொலி எம்.பி ஆகியோர் தொடங்கி வைத்தனர். உடன் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம், தஞ்சை மாநகரச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பங்கேற்று பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்றனர்.